★ விலை ரூபா 1:00


# ஈழநாடு
THE EELANADU

(1958 வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆவணி 7 ஜுல்கஃ 13 இதழ் 191

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 23-8-83


## யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு

### ஊரடங்குச் சட்டம் அமுல்

(கொழும்பு)

நேற்று முதல் மறு அறிவித்தல் வரை இரவில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இரவு 7 மணி முதல் காலை 4 மணி வரை ஊரடங்குச் சட்டம் இம் மாவட்டங்களில் அமுலில் இருக்கும்.

ஏற்கனவே ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் 8 மாவட்டங்களிலும் (கண்டி மற்றும் கொழும்பின் சில பகுதிகள் தவிர) தொடர்ந்து இரவு ஏழு மணிமுதல் அதிகாலை நான்கு மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும்.

## மேல் நீதிமன்ற விசாரணைக்கு உத்தரவு

(திருகோணமலை)

இருபத்திரண்டு வயது மனைவியை அடித்துக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள எதிரிக்கு எதி

(4-ம் பக்கம் பார்க்க)

# உறவினர்களுடன் தங்கியிருக்கும் அகதிகளுக்கும் முகாம்கள்

## சமூகசேவைத் திணைக்களம் நடவடிக்கை

(ஏ. வி. மாணிக்கம்)

**யாழ்ப்பாணத்தில் உறவினர்களின் வீடுகளில் தங்கியிருக்கும் அகதிகள், முகாம்களுக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளதால், புதிய முகாம்கள் அமைக்கும் பணியில் யாழ். சமூக சேவைத் திணைக்களம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.**

சமூகசேவை உதவிப் பணிப்பாளர் திரு. கே. கெங்காதரன் இத்தகவலைத் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் சுமார் 12,000 குடும்பங்கள் அகதிகளாக உறவினர்கள் வீடுகளில் இருக்கிறார்கள். இத் தொகையில் பல குடும்பங்கள் அகதிகள் முகாம்களுக்குச்செல்ல சமூக சேவைத் திணைக்களத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்களென்று தெரிவித்த திரு. கெங்காதரன், அகதிகள் தங்கியிருக்கும் முகாம்களில் ஏற்கனவே அகதிகள் தொகை அதிகமாக உள்ளதால் புதியமுகாம்கள் அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று சொன்னார்.

அகதிகள்முகாம்கள் அமைப்பதற்கான முயற்சிகளில் சமூகசேவைத் திணைக்களம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது என்றும், அதற்குரிய இடங்களைத் திணைக்களம் பார்வையிட்டு வருவதாகவும், கைதடியில் இருக்கும் முகாமில் இருந்த 460 அகதிகளில் 200 பேர் புங்குடுதீவிலுள்ள சர்வோதய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் திரு. கெங்காதரன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சியில் சென். திரேசா ஆலயத்தில் 188 பேர் அகதிகளாகத் தங்கியிருக்கிறார்கள். சென். திரேசா ஆலயம் இவர்களின் நலன்களைப் பொறுப்பேற்றுக் கவனித்து வருகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## தொழிற்சாலைகள் இழப்பு: புதிய மதிப்பீடு

[கொழும்பு]

அண்மையில் இடம்பெற்ற கலவரங்களினால் தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்ட இழப்புகள் முன் கூறப்பட்டதுபோல் அதிகமானதல்லவென இது தொடர்பாக மதிப்பீடுகளை மேற்கொண்ட 'பணி நிறைவேற்றுக் குழு' தெரிவித்துள்ளது.

உற்பத்தி, தொழில் வாய்ப்பு இழப்பு, கட்டிடங்கள் மூலதனங்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றியும் இக்குழு மதிப்பீடுசெய்துள்ளது.

தொழிற்சாலை நிர்வாகிகளையும் இக்குழுவினர் சந்தித்து பாதிக்கப்பட்ட தொழிற்சாலைகளின் சேதங்கள் பற்றியும் கேட்டறிந்துகொண்டனர்.

பாதிக்கப்பட்டதொழிற்சாலைகளில் 10 உடனடியாக ஆரம்பிக்கப்படுமென்றும், 19 தொழிற்சாலைகள் ஒருமாத காலத்திற்குள் அமைக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

28 கைத் தொழிற்சாலைகள் முற்றுக்ச் சேதமடைந்திருந்ததாகவும், இதனால் 15,000 ஊழியர்கள் வேலையிழந்துள்ளதாகவும் மதிப்பீடுகள் மூலம் தெரியவந்துள்ளது.

இத் தொழிற்சாலைகளின் இயந்திரங்களை வாங்குவதற்கு 175 கோடி ரூபா தேவையெனவும் 'பணி நிறைவேற்றுக்குழு' தெரிவித்துள்ளது.

சேதமடைந்த தொழிற்சாலைகள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டதும், 6 மாதங்களில் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவேண்டுமென்றும் இக்குழு சிபார்சு செய்துள்ளது.

## ராஜேந்திரன் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவராக திரு. நடேசு ராஜேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நியமனத்தை யாழ். மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியும், அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா அறிவித்துள்ளார்.

**திரு. ந. ராஜேந்திரன் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதையடுத்து மாவட்ட அபிவிருத்தி சபையின் புதிய உறுப்பினராக ஜனாப் சேதுமதார் மொஹமட் சுல்தான் மொஹிதீன் நியமிக்கப்பட்டுள்ளார்.**

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் பதவியிலிருந்து திரு. சு. நடராசா ராஜினா

(4-ம் பக்கம் பார்க்க)

## நயினை அம்பாள் கும்பாபிஷேக யாகாரம்பம் நாளை

(நயினாதீவு)

வடபகுதியின் பிரபல யாத்திரை ஸ்தலமான நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோவில் மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 28-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

யாகாரம்பம் நாளை புதன் கிழமை. 27-ம் திகதி சனிக்கிழமை எண்ணெய்க் காப்பிடுதல் நிகழும். மகாகும்பாபிஷேகம் ஞாயிறு காலை 6-05 மணி முதல் 7-15 மணிவரை நடைபெறும்.

கும்பாபிஷேக தினம் இரவு ஊஞ்சல் மற்றும் பரிவார மூர்த்திகள் வீதிவருதல் இடம் பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 30 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

கிரியைகள் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்கோவில் உற்சவகாலக்குரு, பிரதிஷ்டா பிரதமகுரு, பிரதிஷ்டா கிரியா கலாமணி சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருக்கள் தலைமையில் நிகழும்.

அடியார்களின் வசதியை முன்னிட்டு 26-ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் அன்னதான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அடியார்களின் நலனைக்

(4-ம் பக்கம் பார்க்க)

### செய்தித் தணிக்கை

**கடந்த மாதம் 30ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.**

## அகதிகள் புனர் வாழ்வுக்கு: வட பி.போ.வ. சபை ஊழியர் நிதி வழங்குவர்

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிதிக்கு உதவிசெய்ய வட பிராந்திய போக்குவரத்து சபை உத்தேசித்துள்ளதாக, அதன் தலைவர் திரு. சி. கனகரத்தினம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''நாட்டில் அண்மையில் ஏற்பட்ட கலவரம் காரணமாகச் சொத்திழந்து, சுகமிழந்து, ஆதரவற்றநிலையில் அகதிகளாக வந்திருக்கும் நம் இனத்தவர்களுக்கு மனிதாபிமான ரீதியில் எம்மாலியன்ற உதவியைச் செய்யவேண்டியது எமது கடமையாகும். துன்பத்தில் மூழ்கி, மனமுடைந்து, மனங்கலங்கிய நிலையிலிருக்கும் அகதிகளுக்கு வடபிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்களும் நிதிஉதவி அளிக்கத் தயங்கமாட்டார்கள் என்பதை யான் அறிவேன்.

''இதுபோன்ற நன்கொடைகள், பல்வேறு நாடுகளினாலும் வெவ்வேறு தனியார் ஸ்தாபனங்களினாலும், தனிநபர்களினாலும் சேகரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே.

''இந்நிலையில், அகதிகள் புனர்வாழ்வுக்காக நாம் ஆயிரமாயிரமாக அள்ளிக்கொடுக்கும் நிலையில் இல்லாதிருப்பினும், ஓரளவு கணிசமான நிதியைத் திரட்ட வேண்டுமாயின் தொடர்ந்து மூன்று

(4-ம் பக்கம் பார்க்க)

## கடை உதவியாளர் சுட்டுக் கொலை: மூவருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(திருகோணமலை)

பன்குளம் கொலை தொடர்பாக பொலிசார் மூன்று சந்தேக நபர்களுக்கு எதிராக கொலைக் குற்றஞ்சாட்டி திருகோணமலை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

பண்குளத்தில் கந்தையா என்பவருக்குச் சொந்தமான கடையில் உதவியாளராகப் பணியாற்றிய நாகராசா சிறிஸ்கந்தராசா என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்ததாக புஞ்சி பண்டா, விக்டர் குருகே, கிரிபண்டா என்னும் மூவருக்கு எதிராக வழக்குத் தாக்கலாகியுள்ளது.

கந்தையா என்பவரின் கடையிலிருந்து இருபதாயிரம் ரூபா பணத்தைக் களவெடுத்ததாகவும் இவர்களுக்கு எதிராகக் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது. கந்தையா என்ற கடை உரிமையாளரை அடித்துக் காயப்படுத்தியதாக மூன்றாவது எதிரி புஞ்சிபண்டாவுக்கு எதிராகக் குற்றஞ் சுமத்தப்பட்டுளது. உப்புவெளி பொலிஸ் சார்ஜண்ட் கே. கைலைநாதன் பொலிசார் சார்பில் ஆஜராகியிருந்தார். திருமலை மேலதிக நீதிபதி ஜோர்ஜ் பெரேரா விசாரணையை ஒத்திவைத்துள்ளார்.


## ஓர் அரிய சந்தர்ப்பம்

உலகின் எப்பாகத்திற்கும் நீங்கள் செல்வதற்கு வேண்டிய பிரயாண ஒழுங்குகளை மிகவும் குறைந்த செலவில் யாழ். நகரில் பெற்றுத்தர நாம் ஒழுங்குகள் செய்துள்ளோம்,

★ லண்டன் ★ சிங்கப்பூர் ★ மலேசியா
★ அமெரிக்கா ★ அவுஸ்திரேலியா
★ கனடா ஆகிய நாடுகளுக்கு

எம்மிடம் மிகவும் குறைந்த விலையில் விமானச் சீட்டுகள் (Cut Fare Tickets) உண்டு.

**இந்தியாவில்!**

கல்லூரிகள் பிரவேசம் மற்றும் போக்குவரத்து இருப்பிட வசதிகளுக்கும் எம்மைத் தொடர்புகொள்க.

**ஏற்றுமதியாளர்களுக்கு!**

யாழ். நகரிலிருந்து உங்கள் பொருட்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதிசெய்வதற்கு வேண்டிய ஒழுங்குகள் யாழ். நகரிலிருந்து கவனிக்க எமது சேவையை நாடுங்கள்!

Lango Hellenic Travels
4/1, FIRST CROSS STREET, JAFFNA.
(8323) தொலைபேசி: 23731

# விளம்பரம்

## தேவை

சுத்தமான வேப்பம் விதை, இலுப்பை விதை தேவை. மில்க்வைற்- யாழ்ப்பாணம். 8245

யாழ். வளாகத்திற்கு அண்மையில் அல்லது 1—3 மைல் சுற்றுடலுக்குள் பஸ் தரிப்புக்குக் கிட்ட, இருவர் (தாய், மகள்) வசிக்க வசதியான வீடு/பகுதி வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு; செ. தனபாலசிங்கம், ''வேல் வாசம்'', சங்கானை. 8317

## விற்பனைக்கு

சாவகச்சேரி தாமோதரம் பிள்ளை வீதியில் 4 பரப்பு வீடுகட்டக்கூடிய காணி விற்பனைக்குண்டு. உடன் கடித மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8289 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 8289

கிளிநொச்சி [பட்டணசபை எல்லையுள் கணேசபுரத்தில் ஒரு (1) ஏக்கர் வீட்டுக் காணி மின்சார வசதியுடன் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்: சி. எஸ். சிவஞானம், 56, மருதப்புவீதி, கணேசபுரம், கிளிநொச்சி. 8316

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, சென்ற் பீற்றஸ் ஒழுங்கை இல: 153/1 ஐச் சேர்ந்த காலஞ்சென்ற கனகரத்தினம் கைம்பெண் சிவானந்தநாயகி என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

சுப்பிரமணியம் திருநாவுக்கரசு, 117, அருணகிரி வீதி, திருகோணமலை,

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் ) இல: 566

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 24 ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்,

நீதிமன்றக் கட்டளைப்படி

**க. மாரிமுத்து**

பதிவாளர்

1983 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 10ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

8298

# பாதிக்கப்பட்ட ஊழியர்கள்:

## யாழ். பிரஜைகள் குழு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட அரசாங்க- கூட்டுத்தாபன - தனியார் துறை ஊழியர்களின் ஆலோசனைக்கூட்டம் யாழ்ப்பாண பிரஜைகள் குழுத் தலைவர் பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் தலைமையில் ஆரம்பமான போது, உயிரிழந்த-பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றபோது பாதிக்கப்பட்ட ஊழியர்கள் கணிசமான அளவு சமுகமளித்திருந்தனர்.

தலைவர் பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் கூட்டத்தின் நோக்கம் குறித்து எடுத்துரைத்தார். பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் இன்றையநிலையில் இக்கூட்டம் கூடவேண்டிய அவசியம் குறித்து விளக்கினர்.

''அரச, கூட்டுத்தாபன, வங்கி. தனியார்துறை ஊழியர்கள் ஒன்றுக இயங்கி அவர்கள் கருத்துக்களையும் எடுக்கும் முடிவுகளையும் ஒன்றுக-ஒருமுகமாகத் தெரிவித்தால் தான் தேவையேற்படும்போது அரசுடனே-அதிகாரிகளுடனே தொடர்புகொண்டு அதற்குரிய நடவடிக்கைகளை பிரஜைகள் குழுவோ மற்றும் சமூகசேவை ஸ்தாபனங்களோ செய்ய முடியும் என்று தெரிவித்ததுடன் அனைவரும் ஒரு இயக்கமாக இயங்கினல் ஏற்படக் கூடிய நன்மைகளையும் எடுத்துக் கூறினர். அத்துடன் அரசாங்க அதிபர் ஆதரவில் இயங்கி வரும் 'அகதிகள் புனர்வாழ்வு நிதியம்' அரச, மற்றும் தனியார்துறை ஊழியர்கள் சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுத்துள்ளதையும் சுட்டிக் காட்டினர். அதன் பின்னர் அகதிகள் புனர்வாழ்வு உறுப்பினரான திரு. ஆர். ஜே. குணரத்தினம் 'அகதிகள் புனர்வாழ்வு நிதியம்' ஆரம்பித்ததன் நோக்கத்தையும், அதுசெயற்பட்டு வரும் நோக்கத்தையும் விரிவாக எடுத்துரைத்தார்.

ஊழியர்கள் சம்பந்தமாக அரசாங்கத்துக்கு ஏற்கனவே அனுப்பப்பட்ட மகஜர்கள் பற்றியும் அவர் எடுத்துக் கூறினர்.

அகதிகளாக கப்பல் மூலமாக வந்த குடும்பத்தவர் விபரங்களை சேகரிக்க வேண்டிய படிவங்கள் தயாராகியுள்ளன என்றும் அப்பணியில் தொண்டர்கள் ஏற்கனவே ஈடுபட்டுள்ளனர் என்றும் சில தினங்களில் முழு விப்ரங்களையும் திரட்டி விடுவர் என்றும் கூறினர்.

கப்பலில் வராதவர்கள் ஒவ்வொரு அரசாங்க அதிபர் அலுவலகத்திலும் குறித்த படிவங்கள் பெற்று அவற்றை நிரப்பி அனுப்ப வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

அவரைத் தொடர்ந்து அகதிகள் புனர்வாழ்வு நிதியத் தலைவர் டாக்டர் யோகு பசுபதி சகல ஊழியர்களுக்கும் 31-10-83 வரை தமது அலுவலகங்களுக்குச் செல்லாமலிருப்பதற்கு அனுமதிவழங்க வேண்டும் என்றும், அத்துடன் ஒவ்வொருஊழியர்களுக்கும் 3மாத சம்பளம வழங்க வேண்டுமென்றும் அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

குழுமியிருந்த ஊழியர்கள் ஒரு சங்கமாகஇயங்கும்நோக்குடன் செயலாளர் கேட்டுக் கொண்டபோது தங்கள் தனிப்பட்ட சங்கமாக இயங்காது யாழ். பிரஜைகள் குழுவின் ஒரு அங்கமாக இயங்குவதாக அபிப்பிராயம் தெரிவித்தனர். அக்கோரிக்கைஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதால், பாதிக்கப்பட்ட ஊழியர்கள் நடவடிக்கைக் குழு என்னும் பெயரில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

அதன் தலைவராக முன்னுள் உள்நாட்டு இறைவரித் திணைக்கள பிரதி ஆணையாளர் திரு. கே. இராஜசிங்கம் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக திரு. ஐ. தி. சம்பந்தனும், உதவி செயலாளராக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தைச் சேர்ந்த திரு. லக்ஷ்மணனும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஏழுபேரைக் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

நடவடிக்கைக் குழுத் தலைவர் திரு. இராஜசிங்கம் பேசுகையில் ''பாதிக்கப்பட்ட ஊழியர்கள் அனைவரும் தொடர்பு கொள்ளுமாறும், அவர்கள் விபரம் கிடைத்தவுடன் இக்குழு துரிதமான முறையிலும், பாதிக்கப்பட்ட ஊழியர்கள் அனைவரினதும்நிலையை மேலிடத்துக்கு எடுத்துக்கூறக் கூடிய முறையில் இயங்க ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டார்

இக் கூட்டத்தில் பிரஜைகள் குழு உறுப்பினர்கள் டாக்டர் ஜே. பி. ஸி. பிலிப், பேராசிரியர் டி. ராமதாஸ் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர். (மா)

## கேள்விப் பத்திரம் கோரல்

பனங்காமம் பற்று பல நோ. கூட்டுறவுச் சங்கம் வவுனிக்குளத்தில் 1845 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனை செய்யஇருக்கின்றது.

வெற்றுச்சாக்குகளை பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் மீளளிக்கப்படும் வைப்புப் பணமாக ரூபா 100/-ம் மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 10/-ம் செலுத்தி சங்கத்தால் வழங்கப்படும் கேள்விப்பத்திரத்தை பெற்று தலைவர் பனங்காமம் பற்று பல நோ. கூ. சங்கம் வவுனிக்குளம் என்ற விலாசத்திற்கு 6-9-83க்கு முன்னதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'வெற்றுச்சாக்கிற்கான கேள்விப்பத்திரம்' என குறிப்பிடல் வேண்டும். பொருளைப் பார்க்க விரும்புபவர்கள் வேலை நாட்களில் காலை 8-00 மணி முதல் பிற்பகல் 5-00 மணிவரை பார்வையிடலாம்.

சா. வனஜா,
பொதுமுகாமையாளர்,
பனங்காமம் பற்று பல
நோ. கூ. சங்கம்,
வவுனிக்குளம்.

8318

## சேவைகள் தொடர்ந்து நடக்கும்

(யாழ்ப்பாணம்)

தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் இன்று முதல் ஒரு வாரம் லீவில் சென்றாலும் அண்மையில் இடம்பெற்ற இனக்கலவரங்களினல் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றம், சம்பளம், 3 மாத முற்பணம் ஆகியவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கையை சங்கம் எதுவித தடையுமின்றி தொடர்ந்து மேற்கொள்ளுமென்று சங்கத்தலைவர் திரு. டி. எஸ். கே. வணசிங்கா தெரிவித்தார்.

திரு. மகாசிவத்தின் திருமண வைபவம் நாளை புதன்கிழமை காலை மிகவும் எளிமையாக நடைபெறுவதாலேயே அவர் லீவில் சென்றுள்ளார் என்றும் திரு. வணசிங்கா தெரிவித்தார்.

# அண்ணன் தாக்கியதால் தம்பி தற்கொலை!

(கிளிநொச்சி)

அண்ணன் தம்பிக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது இறுதியில் அண்ணனல் தாக்கப்பட்ட தம்பி மனவேதனை தாங்காது நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

இராமநாதபுரத்தைச் சேர்ந்த அன்ரன் சேவியர் (21 வயது என்பவரே மரணமானவராவார். இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரண விசாரணை அதிகாரி மு. யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சிப் பொலிஸ் கான்ஸ்டபிள் அ. இராமசாமி ஆஜர்செய்தார்.

மரணமானவருக்கும் அவரது சகோதரருக்குமிடையே ஏற்பட்ட தகராறு கைகலப்பாக மாறியது எனவும் இதன் பின்னர் தம்பி கவலைஅடைந்து இவ்உலகில் வாழவிரும்பாது கிருமிநாசினியை அருந்தி மரணத்தை தழுவினர் எனவும் தாயார் எ. அக்னேஸ் அம்மா அளித்த சாட்சியங்களில் இருந்து தெரியவந்தது.

மரணவிசாரணை அதிகாரி யோகலிங்கம் தற்கொலை என தீர்ப்பு வழங்கினர். (க)

## இவர்களைக் காணவில்லை

(கொழும்பு)

மொறட்டுவ பல்கலைக் கழகத்தின் பொறியியல் இறுதியாண்டு மாணவன் வேல்முருகனையும், அவரது மற்றுமிரு நண்பர்களான இன்பம், தவராஜாவையும் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களின்பின்னர்காணவில்லைஎன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோத நெற் செய்கையாளர்மீது நடவடிக்கை

(திருகோணமலை)

சந்தளாய் வெண்டரசன் புரம் பகுதிகளில் சட்டவிரோதமாக அனுமதியின்றி நெல் விவசாயம் செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதென அரசு முடிவு எடுத்துள்ளது.

நீர்பாசன சட்டவிதிகளின் கீழ் இவ்வாறு சட்டவிரோதமாக நெற்செய்கை பண்ணப்பட்ட ஒவ்வொரு ஏக்கருக்கும் தலா நானூறு ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவினை கந்தளாய் உதவி அரசாங்க அதிபர் பிறப்பித்துள்ளார். இவ் அபராதத்தொகையை அவ்வப்பகுதி கிராம சேவகர்கள் சேகரிப்பார்கள். கமத்தொழில் அலுவலர்கள் தயாரித்த சட்டவிரோத நெற்செய்கையாளர் பட்டியலின் அடிப்படையிலேயே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சட்டவிரோத நெற்செய்கையில் ஈடுபட்டவிவசாயிகளின் பெயர்கள் முகவரி, ஏக்கர் விபரம் ஆகியன இவ்வறிக்கையில் தரப்பட்டுள்ளன.

உதவி அரசாங்க அதிபர் நீர்பாசனச் சட்டத்தின் கீழ்தனக்குள்ள அதிகாரத்தைப்பயன்படுத்தி விதித்துள்ள அபராதத்தைச் செலுத்தத் தவறும் அல்லது மறுக்கும் விவசாயிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமென்று அதிகாரிகள் விளக்கினர்கள்.

## 'வெரித்தாஸ்' ஒலிபரப்புக்கும் திருச்சபைக்கும் தொடர்பில்லை

(எம். வரதன்)

''இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபைக்கும், வெரித்தாஸ் வானெலியில் ஒலிபரப்பப்படும் இலங்கையின் இன்றைய அரசியல் நிலைமைபற்றிய செய்திகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை'' என்றுஇலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் சமூகத் தொடர்புகள் தேசிய சபையின் சிங்கள பிரிவின் தலைவர் அதி. வண. ஆயர் வியான்னி பெர்ஞண்டோ ஆண்டகை விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் கூறியுள்ளதாவது:- வெரித்தாஸ் வானெலியின் ஒலிபரப்பில் வெளியிடப்படும் உண்மைகளும் ஒலிபரப்பும் மதிநுட்பமும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

வெரித்தாஸ் வானெலியில் வெளியிடப்படும் சில அறிக்கைகள்இங்குள்ளதிருச்சபை ஊடாகக் கொடுக்கப்படுகிறது என்ற கருத்தைத் தோற்றுவித்து இவ்வானெலி இலங்கையில் வாழும் மக்கள் மத்தியில் அமைதி நிலவுவதற்கு அனுதாபமற்றதெனவும் தெரியவும் செய்கிறது. உண்மையில் இது தவருன எண்ணமாகும். இங்குள்ள திருச்சபையின் எந்த நிறுவனமும் நேரடியாகவோ மறைமுகமாகவோ 'வெரித்தாஸ'க்குச் செய்திகள் வழங்குவதில்லை. அவர்கள் திருச்சபையின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட 'ராய்ட்டர்' நிறுவனங்கள் மூலம் செய்திகளைப் பெறுகின்றனர். 'வெரித்தாஸ்' வானெலியில் பௌத்தமத ஒலிபரப்புக்களும் கிரமமாக நடைபெறுகின்றன. அது ஒலிபரப்பிய வெசாக் நிகழ்ச்சிகளை இலங்கை வானெலி மறு ஒலிபரப்புச் செய்தது. அதைத் கேட்டவர்களுள் 125 மகாசங்க உறுப்பினர்களும் உள்ளனர். இதிலிருந்து ''வெரித்தாஸ்'' சகலமதக் கருத்துக்களும் இடமளிக்கிறது என்பதும் ஒருமதத்திற்கேமுக்கியத்துவம்கொடுக்கவில்லை என்பதும் நிரூபணமாகிறது.

வெரித்தாஸ் செய்தி பற்றி வெளிநாட்டு அமைச்சர் ஜனுப் ஏ. சி. எஸ். ஹமீத் பிலிப்பைன்ஸ் தூதுவருடன் தொடர்பு கொண்டதும் அவர் தங்கள் அரசுக்கும் அதற்கும் தொடர்பில்லை எனத் தெரிவித்தமையும் குறிப்பிடத்தக்கது.

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்சங்காபிஷேகமும் மணவாளக் கோல உற்சவமும் 24ம் திகதி காலை நடைபெறும்.

## உடன் வாடகைக்குத் தேவை

வெலிங்டன் சந்தியிலிருந்து 200 யார் சுற்றுடலுக்குள் G. C. E. (A/L) தனிப்பட்ட வகுப்பு (ஒரு ஆசிரியரினல்) நடாத்துவதற்கு 60X30 அடி விஸ்தீரணமுள்ள காணி அல்லது 40X20 அடி வீடு / பகுதி வீடு அல்லது கட்டிடம் உடன் தேவை. தகுந்த வாடகை கொடுக்கப்படும்.

விளம்பரதாரர்,
32, பிரப்பன்குளம் ரோட்,
வண்ணார்பண்ணை. யாழ்ப்பாணம். 8310

# இன்றைய பலன்

ஆவணி 7ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(23—8—83)

மேடம்: சுறுசுறுப்புக் குன்றும். உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள். குடும்பத்தில் சிறிய பூசல் தோன்றி மறையும். கொள்கையில் கோணலுடன் கோபமும் அதிகரிக்கும்.

இடபம்: தாய்வழியின் பெருமையுடன் வாழ்வும் கிட்டும். எதிரிகள்கூட வரவேற்பார்கள். மருத்துவத்துறையில் ஈடுபடுபவர்களுக்கும் மகத்தான தினம்.

மிதுனம்: மக்களால் மகிழ்ச்சியும் புதுமையில் நாட்டமும் பிறக்கும். புத்திரர் ஒருவரின் வெளிநாட்டுப் பயணத்திற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். டாக்டர்கள் போற்றப்படுவார்கள்.

கடகம்: இதயம் எரிமலையாகும். எதிரிகள் தாக்குவார்கள். ஏமாற்றத்திற்கும் இடமுண்டு. எனினும் இருள் சூழ்ந்தநிலை தென்படும். அதிகம் பேச்சைத் தவிர்த்து கடமையில் ஈடுபடவும்.

சிங்கம்: களஸ்திரவழியால் நன்மைகள் வந்துசேரும். குடும்பத்தில் தென்றல்வீசும்.

கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளை ரசிப்பதில் காலத்தைக் கடத்துவீர்.

கன்னி: போட்டா போட்டிகளில் ஈடுபடுவதன் மூலம் பணம் பாழாகலாம். முகமன் பேசுவோர் விடயத்தில் எச்சரிக்கையாக இருக்கவும். விவசாயிகளாயின் கடன்படநேரிடலாம்.

துலாம்: பூமியால் லாபமுண்டு பொதுசனத் தலைமைக்கான வாய்ப்பும் கிடைக்கும் பிதாவழியால் தேவையான உதவி கிடைக்கும் தொழில் புரியும் இடத்தில் சகதொழிலாளரின் ஆதரவும் உண்டு.

விருச்சிகம்: எதிலும் முன்னணியில் நிற்பீர்கள் இன்று பிறரின் கவனம் உங்கள் மீது பதியப்படலாம் சொந்தமாகத் தொழில் செய்யவும் இன்று ஆலோசிக்கலாம்.

தனு: பொருளீட்டுவதில் புதிய வழிகளைக் கையாளுவீர் எதையும் சிறப்பாகச் செய்வீர்கள் உத்தியோக உயர்வுக்கும் உரிமைகளைப் பெறுவதற்கும் இடமுண்டு.

மகரம்: குறுக்கு வழியில் இறங்குவதால் சட்டத்தின்பிடியில் மாட்டிக் கொள்ளுவீர்கள் திரைமறைவில் உங்கள் நடவடிக்கைகளை கண்காணிக்கப்படும்.

கும்பம்: நீண்டநாள்உறவில் முறிவு ஏற்படலாம் கடமையாற்றுமிடத்தில் நிதானத்துடன் நடந்து கொள்ளவும் பிரயாணத்தின் போது பொருள் நழுவக் கூடும்.

மீனம்: போதுமென்ற மனதுடன் இருப்பீர்கள் எதிலும் நிறைவு தென்படும் முதியவர் ஒருவரின் அறிவுரைஉங்களுக்கு புதிய பாதை காட்டும் குடும்பத்தில் அன்பு மலரும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

சாந்தி யாழ். நகர்
காலை 10-30, 2-30 6-30
எம். ஜி. ஆர்.
எங்க வீட்டு பிள்ளை
கலர் - புதியபிரதி

லிடோ (யாழ். நகர்)
10-30, 1-30, 3-30
Sean Connery 007
YOU LIVE ONLY TWICE
(Colour - Scope)

ஹரன் (யாழ். நகர்)
காலை 10-30, 2-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் துணை
(கலர்)

வெலிங்டன்
(யாழ். நகர்)
காலை 10-30
பிரதாப்— சோபா
மூடுபனி

றீகல்
10-30, 2-00, 4-30
GIRL FROM INDIA

ராஜா (யாழ்நகர்)
10-30, 1-30
பாக்கியராஜ்—அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
அந்த 7 நாட்கள்
(கலர்)

மனோகரா
(யாழ்நகர்)
தினசரி மு. ப. 10-30
பி. ப. 2-00
சிவாஜி — விஜயா
விஸ்வரூபம்
(கலர்)

வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்.,
சரோஜாதேவி, நாகேஷ்
பணத்தோட்டம்

போயா தினத்தை யொட்டி இன்று சினிமா காட்சிகள் இல்லை.

# ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் வைத்திய பீடத்தைச் சேர்ந்த இரண்டாவது ஆண்டு மருத்துவ பட்டப்படிப்பு தமிழ் மாணவர்களின் ஆலோசனைக் கூட்டமொன்று நாளை 24-ம் திகதி காலை 10 மணியளவில் சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் பட்டப்படிப்பின் எதிர்கால நடவடிக்கைபற்றி ஆராய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்துக்குச் சகல 1-ம், 2-ம் வருட மாணவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். (க)

# உண்மை ஊழியன்



இளம்வயதிலேயே மக்கள் பணிக்கென்று தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த உண்மை ஊழியன் அ. விமலதாசன் தமது 29-வது வயதில் திடீரென மறைந்தது அதிர்ச்சியளிப்பதாகும்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்த இவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்து விஞ்ஞான மாணிப் (B. Sc.) பட்டதாரியாவார் எனினும் முழுநேர மக்கள் சேவைக்கே தம்மை அர்ப்பணித்து, சமூக பொருளாதார அரசியல் ஆன்மீகத்துறைகளிளெல்லாம் அயராது உழைத்து வந்தார்.

''மனிதன்'' மாதாந்தப் பத்திரிகை ஆசிரியர் குழுவின் முக்கிய உறுப்பினராகக் கடமையாற்றிய இவர், பின்னர் கொழும்பு சமூக சமய நிலையம் ''மார்கா'' நிறுவனம் ஆகியவற்றிலும், யாழ். ''தீபம்'' நிறுவுவனத்திலும் சமூக ஆய்வாளராகப்பணிபுரிந்துள்ளார். இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் (MIRJE) மூலமாக தமிழ் மக்களின் பிரச்சனைகளைச் சிங்கள சகோதரர்களுக்கு எடுத்துவிளக்கவும் இவர் அரும்பாடுபட்டார். சிறந்த கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்ந்த விமலதாசன் அவர்கள், இந்து-இஸ்லாமிய, கிறிஸ்தவ பௌத்த மார்கஸீய மார்க்கங்களைக் கடைப்பிடிக்கும் பல்வேறு மக்களிடையே ஒரு புரிந்துணர்வுப்-பாலமாக விளங்கிய 24 - 7 - 1983 காலை அகால மரணத்துக்குள்ளாகி அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தி இறைவனடி சேர்ந்தார்.

— ஜெ. ச.

# மக்கள் ஆர்வம்

(சுழிபுரம்)

பண்ணுகம் உப-தபால் நிலையம் மீண்டும் திறந்து வேலை செய்வதற்குத் தக்க பாதுகாப்பை வழங்கப் பொதுமக்கள் முன்வந்துள்ளனர். (ப)

பரு. உதவி அரசஅதிபர் பிரிவில்

# அகதிகள் புனர் வாழ்விற்கு விபரம் திரட்டப்படும்

(புலோலி)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வன்செயலால் பாதிக்கப்பட்டு வந்திருக்கும் அகதிகளின் புனர்வாழ்விற்கு உதவும் முகமாக முழு விபரங்களும் திரட்டப்படவுள்ளன.

பருத்தித்துறை கிராமோதய சபைக் கூட்டத்தில் இவ்வகதிகளின் பூரண விபரங்களையும் திரட்டிப் புனர் வாழ்விற்கான திட்ட அறிக்கையைத் தயாரிப்பது என்று முடிவுசெய்யப்பட்டது. பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் கிராமோதய சபைத் தலைவர் திரு. மு. பொ. வீரவாகு தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில்:-

''சகலதர அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்கள், தனியார் துறையினர். பல்கலைக் கழக மாணவர்கள், சொந்தத் தொழில் செய்வோர் முதலான அகதிகள் எல்லோரையும்பற்றிய விபரங்களைத் திரட்டிப் பகுத்துப் புள்ளி விபரம் திரட்டுவதற்காகக் கேள்விக் கொத்து ஒன்று தயாரித்து விநியோகிக்கப்படுமென்றும், இக்கேள்விக் கொத்து பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல கிராமோதய சபைகள் மூலம் விநியோகிக்கப்பட்டு, பருத்தித்துறை உதவி அதிபர் பிரிவிற்கான அகதிகள் விபரம் திரட்டப்படுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கான படிவங்களை பருத்தித்துறை பொன்னுச்சாமித் கோட்டத்திலுள்ள பருத்தித்துறை கிராமோதயசபைத் தலைவரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அகதிகள் முகாமை பொறுப்பேற்கத் தீர்மானம்

(புலோலி)

பருத்தித்துறை கிராமோதய சபை, அகதிகள்முகாம் ஒன்றை பொறுப்பேற்று நடாத்த முன்வந்துள்ளது.

பருத்தித்துறைக் கிராமோதய சபைக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

பருத்தித்துறையில் அகதிகள் முகாம் அமைக்கப்பட்டால் அதில் ஒரு முகாமைக் கிராமோதய சபை பொறுப்பேற்று நடாத்துவது என்றும், இதுபற்றி யாழ். அரசாங்க அதிபருக்கு அறிவிப்பது என்றும், இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

# தூர இட பஸ் சேவைகள்

(மன்னார்)

மன்னாரிலிருந்து தூர இடங்களுக்கு நடைபெறும் பல பஸ் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மன்னாரிலிருந்து மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, அனுராதபுரம் ஆகிய தூர இடங்களுக்கான பஸ் சேவைகளே மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களின் போது தூர இடங்களுக்கான சகல பஸ் சேவைகளும் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

# பெண் நீதிபதிகள்

புதுடில்லி, ஆக. 20

பலாத்கார வழக்கு மற்றும் பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்கப் பெண் நீதிபதிகளை நியமிக்கவேண்டுமென்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி விரும்புகிறார்.

முன்னேற்றமடைந்த நாடுகளில் கூடப் பெண்கள் உண்மையான நீதியைப் பெறவில்லையென்று பாராளுமன்றத்தில் குறிப்பிட்ட திருமதி இந்திராகாந்தி, நாம் பெண்களுக்கு சமுதாயத்தில் உரிய இடம் கிடைக்க வழிசெய்ய வேண்டுமென்றார்.

# வரதராஜப்பெருமாள் கோவில் தேர் வெள்ளோட்டம்

(சுழிபுரம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

பதினைந்து வருடங்களாக பல்வகைத் தாமதங்களுக்கிடையில் புதியதேர் வேலைகள் யாவும்தமிழக சிற்பாசாரிகளாலும் உள்ளூர் கலைஞர்கள் பலராலும் உருவாக்கப்பட்டுள்ளது.

புதிய தேர்முட்டி தேர் நிலை யாவும் பதினைந்து இலட்சம் ரூபா செலவில் உருவாகியுள்ளது. ஸ்ரீ நாராயண மூர்த்தி புதியதேரில் தேவியர் சமேதரராகவரும் தேர்த்திரு விழா 31ம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது. (ப)

யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி
வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சீட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.
குறொஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.
05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA)
போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)
கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்
தற்பொழுது விசேட சேவையாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான விமானப் பிரயாண ஒழுங்கு யாவற்றுக்கும் உடன் விரையுங்கள்!
CROSS TRAVEL SERVICES (PVT)LTD.
Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair
Stage II Modern Market Ist Floor
BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

## மணிவாக்கு

அனுபவம் அதிக செலவில் ஒரு பாடசாலை நடத்துகின்றது; மூடர்கள் வேறெதிலும் படித்துப் பயனடையமாட்டார்கள்.

—ஒஸ்கார் வைல்ட்

# நமது நோக்கு

## அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983

''நல்லவை செய்தல்
ஆற்றீர் ஆயினும்
அல்லவை செய்தல்
ஓம்புமின்''

யாழ்ப்பாண அரச அதிபர் விடுத்த புனர் வாழ்வு பற்றிய வேண்டுகோளை எங்கள் நேற்றைய பத்திரிகையில் படித்ததும், தமிழ் இலக்கியத்தின் பொக்கிஷமான புறநானூற்றில் வரும் இவ்வரிகளேஎமதுமனத்தை ஈர்த்தன. தன்மை அணி (Realism) ததும்பும் வரிகள் இவை.

''எரிந்த வீட்டில் பிடுங்கினது அறுதி'' என்ற நாடோடி வாசகம் இன்றைய கலவரத்தில் என்னென்ன அற்புதங்களை நிலை நாட்டி விட்டதென்பதை அறியதாரும் இங்கு உண்டா?

நாம் நேற்றுக்குறிப்பிட்ட 'சந்தைச் சமுதாயம்'ஆசை என்னும் பெருமணலில் அமைந்துள்ளது. தன்னைத் தானே அழித்துவிடும் மனப்போக்குக்கொண்ட இவ்வித சமுதாய அமைப்பின் சீர்கேட்டை நேரில் கண்டும் அனுபவித்தும் அதனை மீண்டும் வரவழைக்கமுயல்வது மனித இயல்பின் மிக இழிந்த நிலையெனவற்புறுத்தக்கவலைப் பட்டுள்ளோம்.

யாழ்ப்பாணம் வந்துள்ள 40,000 அகதிகளை வரவேற்பதிலும், அவர்கட்கு வேண்டிய அவசர உதவிகள் அளிப்பதிலும், வசதியற்றவரை முகாம்களுக்கு அனுப்பி வைப்பதிலும் பங்கு கொண்ட அத்தனை ஸ்தாபனங்களும் ஒன்றிணைந்து ஆற்றிய சேவை எல்லோராலும் மிகவும் மெச்சப்படுகின்றது.

நாட்டில் என்ன நடந்திருக்கிறது? உடுத்த துணியுடனும் கையில் ஒரு சதமுமின்றி உயிர்களையும் பலி கொடுத்து கண்ணீரும் கம்பலையுமாக வந்த ஆயிரக்கணக்கான மக்கள், தாங்கள் பட்ட பாடும் கெட்ட கேடும் கப்பலில் கே. கே. எஸ். வந்தடைந்தபோது பெற்ற வரவேற்பில் மறந்து விட்டதாகச்சொல்வதானல் புனர்வாழ்வின் தொடக்கம் மிக திருப்திகரமாகச் செயற்பட்டது எனலாம். ஆங்கில முதுமொழி கூறுவதுபோல், நல்ல தொடக்கமென்றால் பணியின் பாதி முடிவடைந்தது எனலாம்.

இருப்பினும் 40,000 பேருக்கு-சிலருக்கு நீண்டகாலம், பலருக்குத் தற்காலிகம்-புனர்வாழ்வுத் திட்டம் தீட்டுவதென்றால் அதில் ஏற்படும் பிணக்குகளும் சிக்கல்களும் எண்ணற்றவை.

இவற்றைச் சாதுர்யமாகச் சமாளிக்க ஏற்படுத்திய நிறுவனமே 'அகதிகள் புனர் வாழ்வு நிதியம் 1983'. இது அரசாங்க சார்பற்ற ஸ்தாபனம் என்பதும், இதனைப் பொறுப்பேற்று ஸ்தாபித்தவர் யாழ். அரச அதிபர் தேவநேசன் நேசையாவென்பதும் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறும் தன்மையான செய்திகள்.

இந்நிதியத்தின் முகாமைச் சபை பல ஆக்கபூர்வமான புனர்வாழ்வுத் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டிய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். திறமைக்கும் நேர்மைக்கும் பேர்போனவர்களே இச்சபைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

புனர்வாழ்வுத் திட்டங்கள் என்பது முன்னர் பல சந்தர்ப்பங்களில் பேசப்பட்டு செயல்முறையில் எத்தனங்கள் எடுக்கப்பட்டும் சுற்றில் பொய்யாய், கனவாய், பழங்கதையாய்ப் போனதுண்டு.

இவ்வித தோல்விகளால் எங்கள் சமூகம் ஒற்றுமையற்றதென்றும், நாம் இனரீதியில் எதனையும் சாதிக்கும் ஆற்றல் அற்றவர்களென்றும் ஒரு அவப்பெயர்பெற்று வந்திருக்கின்றோம்.

ஆனல் இன்றைய நிலை வேறு; நாம் சூடுகண்ட பூனைகள் மட்டுமல்ல; எங்கள் சுயமுயற்சியிலும், சமூக ரீதியின் தன்னிறைவிலும் வெற்றி காணவேண்டுமென்னும் மனத்திடம் தவிர்க்க முடியாததொன்று. ''செய் அல்லாவிட்டால் செத்துமடி'' என்பதே இன்றைய குறிக்கோள்.

இவ்வேளையில் புனர் வாழ்வு என்ற பெயரில் ஒழுங்கற்ற முறையில் நிதி சேகரிப்பவரும்; சேகரித்த நிதியை முறைகேடாக செலவழிப்பவரும் பணியிலிருந்து விழுந்தவரை 'ஏறிமிதிக்கும் மாடுகளென்றே' குறிப்பிட வேண்டும்.

அதற்காகவே நாம் அரச அதிபரின் வேண்டுகோளுக்கு ஒத்தாசை புரிவதில் நல்லவை செய்தலை ஊக்குவிப்பதோடு, அல்லவை செய்தலைத் தடுப்பது மிக முக்கியமெனக் கருதுகிறோம்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983ம்ஆண்டு ஆகஸ்ட்மாதம்23-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389—24126.

## புனர்வாழ்வு தகவல்கள்

(யாழ்ப்பாணம்)

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு தேவையான தகவல்களை புனர்வாழ்வு நிதியத்தைச் சேர்ந்த திரு. சி. எஸ். சுப்பிரமணியம் தலைமையிலான சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினரும், யாழ். மாவட்ட திரிசாரணர்களும் இணைந்து சேகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

# மக்கள் கருத்து

## நிரந்தர தீர்வு

நூற்றுக்கணக்கான இளைஞர்களினதும் மற்றையோரினதும் உயிர்களையும் பல கோடி ரூபா பெறுமதியான பொருட்களையும் ஆனி, ஆடி மாத வன்செயல்களினுல் இழந்து தவிக்கும் தமிழ் மக்களின் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வுகாணப்பட வேண்டும். சமஷ்டிஆட்சி முறை ஒன்றே நிரந்தரத் தீர்வாய் அமையும், அதைத் தந்தை செல்வா அவர்கள் நன்குணர்ந்திருந்தார். அதற்குக் குறைந்த எந்தத் தீர்வையும் தமிழ்த் தலைவர்கள் ஏற்கக் கூடாது. இம்முறை நடந்த வன்செயல்கள் மிகக் கொடியவையாகவும் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தனவாகவும் அமைந்து விட்டன. நமது தாய்நாடாக இந்தியாவும் அந்நாட்டின் உன்னதப் பிரதமர் இந்திரா காந்தியும் தம் சொந்தப் பிரச்னையாக ஏற்று நடவடிக்கை எடுக்கத் தொடங்கியது ஒரு நற்சகுனமாகும். எனினும் தீவிரவாதிகளின் எதிர்ப்பைச் சமாளிப்பது அரசுக்கு மிகக் கடினமாயிருக்கும். அந்த எதிர்ப்பைச் சமாளித்து பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குப் பூரணமான புனர் வாழ்வும் தமிழர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வும் துணிவுடனும் திரிகரண சுத்தியோடும் காண வேண்டியது ஜனுதிபதி திரு ஜயவர்த்தனவின் கடமையாகும்.

சதா. ஸ்ரீநிவாசன்

## தொலைபேசி சீர்கேடு

யாழ். மாவட்டத்தில் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் ஒன்றான புங்குடுதீவில் கடந்த பல மாதங்களாகத் தொலைபேசிச் சேவை சீர்கெட்ட நிலையிலேயே இருந்துவருகிறது!

பல லட்ச ரூபா செலவில் ஏங்படுத்தப்பட்ட வெளி நகரங்களுக்கான தொலைபேசிச் சேவைகூட கடந்த ஒரு வார காலமாக உறங்கிய நிலையிலேயே உள்ளது. அண்மையில் ஏற்பட்ட இனக் கலவரத்தின் போது தவித்த ஆயிரக்கணக்கான மக்கள் தொலைபேசித் தொடர்புக்காக அலைந்துதிரிந்தனர்.

போக்குவரத்துச் செலவும் மற்றும் சிரமங்களும் அதிகமாகியுள்ள இவ்வேளையில் 20 மைல்களுக்கு அப்பாலுள்ள யாழ். நகருக்குச் சென்றே அவசரத் தொலைபேசி அழைப்புக்களைப் பெறவேண்டியவர்களாயிருந்தனர்.

புங்குடுதீவு அஞ்சலகத்தில் எப்போதும் 'தொலைபேசித் தொடர்புச் சேவை துண்டிக்கப்பட்டுள்து' என்ற அறிவிப்பினைக் காணக்கூடியதாகவுள்ளது. சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் தயவுகூர்ந்து இவ்விடயத்தில் தீவிர கவனமெடுத்து ஆவன செய்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

க. திருச்செல்வம்
தலைவர்,
புங்குடுதீவு,
பெருங்காடு கி. அ. ச.

## கைலாசம் கொலை: சந்தேகநபர் றிமாண்ட்

(திருகோணமலை)

கந்தளாய் சீனித் தொழிற்சாலையில் கடமைபுரிந்த கைலாசம் என்பவரின் கொலை தொடர்பாகக் கந்தளாய்ப் பொலிசார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கந்தளாய் பொலிஸ் அதிகாரி திரு. பல்லேவல இக்கொலை தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் எல். சோமசிறி என்பவரைக் கைதுசெய்துள்ளார். இவர் திருமலை நீதிபதியின் உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## மீனவர்களுக்கு மானிய உதவி: அமைச்சருக்கு கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

''தற்போதைய எரிபொருள் விலை அதிகரிப்பினுல் எமது பகுதி மீனவர்கள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளனர். ஆகவே மீன்பிடி வள்ளங்களுக்கு பாவிப்பதற்கான கூறப்பாய் துணிகளை வருடத்திற்கு ஒரு தடவை மீனவர்களுக்கு மானிய அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு எமது சமாஜம் கேட்டுக்கொள்ளுகின்றது.''

இவ்வாறு கடற்றொழில் அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் முக்கிய தீர்மானம், யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க சேவா சங்கங்களின் சமாஜத்தின் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

சங்கத் தலைவரும், ஓய்வு பெற்ற யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க உத்தியோகத்தருமான திரு. ஏ. பிலிப் தலைமையில் யாழ். நகரிலுள்ள சமாஜ காரியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் மாதகல் கடற்றொழில் விரிவாக்க சேவா சங்கச்செயலாளர் திரு. வி. அருந்தவத்தினுல் கொண்டு வரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதுவரை வலைப்பதிவுகள் பூர்த்திசெய்யப்படாத கிளைச் சங்கங்கள் சகல மீனவர்களினதும் வலைகளை பதிந்துகொள்வது சம்பந்தமாகப் பரிசீலனை செய்வதற்கு சமாஜ உபதலைவர் திரு. வி. அருந்தவம் தலைமையில் மூவர் கொண்ட உபகுழுவொன்றும் இக்கூட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ளது.

## மேல்நீதிமன்ற....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராக மேல்நீதிமன்ற விசாரணைகள் நடாத்தப்பட வேண்டுமென திருமலை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

செய்யதுபீபீ என்ற தனது இரண்டாவது மனைவியை கடந்த ஏப்ரல் 11-ம் திகதி அடித்துக் கொலை செய்ததாக சம்சுதீன் அப்துல் ஜபார்மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. எதிரியின் சார்பில் சட்டத்தரணிகள் ஆஜராகவில்லை.

## நயினை அம்பாள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்திற்கொண்டு விசேஷ போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் ஆலயத்தில் தண்ணீர் வசதி சுகாதார வசதிகளும் விசேஷமாக ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன.

தொண்டர்படையினர் பாதுகாப்பு சேவையிலீடுபடுவர்.

## வட பி. போ. வ. சபை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாதத்திற்கு மாதாந்தம் ஒரு நாள் சம்பள வீதம் எல்லோரும் ஏகோபித்து, மனமுவந்து வழங்குவதே சாலப்பொருத்தமாகும். இத்திட்டத்தை செவ்வனே நடைமுறைப்படுத்தும் முகமாக எமது ஆவணிமாதச் சம்பளப்பட்டியலிலிருந்து இந்நிதியைத் திரட்ட உத்தேசித்துள்ளோம். இந்நிதியை அன்பளிப்புச்செய்ய, இரக்க சிந்தையும், கருணை உள்ளமும் கொண்ட எமது ஊழியர்கள் முன்னிற்பார்கள் என நம்புகிறேன்.

''இந்நிதி எமது சபையால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்காகத் தகுந்தமுறையில் பயன்படுத்தப்படும். இவ் வரவு, செலவு அடங்கிய விபரங்கள், கூடிய கெதியில் தங்கள்முன் சமர்ப்பிக்கப்படும்.

இதற்கு மேலாக இதுசம்பந்தமாக வேறு ஏதாவது ஆலோசனைகள் இருப்பின், தங்கள் வேலைத்தலப் பொறுப்பதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளவும். (மா

## சந்நிதி முருகன் தீர்த்தம் இன்று

(யாழ்ப்பாணம்)

தொண்டமானுறு செல்வச் சந்நிதி ஆலய தீர்த்தோற்சவம் இன்று காலை நடைபெற உள்ளது.

## பாலம் திறக்கப்பட்டது

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த உயிர்த்தராசன்குளம் சூரிய கட்டைக்காடு வீதியில் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கிராமியப் பாலம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தலைமையில் நடைபெற்ற இத் திறப்பு விழாவில் மன்னார்மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு பி.எம்.செபமாலை மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் ஜனுப் எம்.எம்.மக்பூல், மன்னார் உதவி அரசாங்க அதிபர் திரு எஸ்.அமிர்தலிங்கம் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ராஜேந்திரன்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாச் செய்ததும், உபதலைவராகவிருந்த திரு.சி. நாகராசா யாழ். மாநகரசபை தேர்தலில் போட்டியிடும் பொருட்டு தமது பதவியை ராஜினுமாச் செய்ததும் தெரிந்ததே.

## உறவினர்களுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சியிலுள்ள நெல் சந்தைப்படுத்தும் சபையின் பழைய களஞ்சியக் கட்டிடத்தில் 258 பேர் அகதிகளாக இருக்கிறார்கள்: றோட்டறிக்கழகம் இவர்களைப் பொறுப்பேற்றுள்ளது.

கனகாம்பிகைக் குளத்தில் அகதிகளாக உள்ள 143 பேர்களின் பொறுப்பை இளம் பறவைகள் கழகம் பொறுப்பேற்று நடத்துகிறது.

வட்டக்கச்சிப் பகுதியிலும் மேலும் ஒரு முகாம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குருநகர் முகாமை யாழ். லயன்ஸ் கழகம் பொறுப்பேற்றுள்ளது, கைதடி முகாமிலிருந்து மேலும் சில குடும்பங்கள் குருநகர் முகாமுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சில்லாலைக்கிராம அபிவிருத்திச் சங்கமண்டபத்தில் 32அகதிகள் தங்கியுள்ளனர். வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினரும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்படையினரும் இவர்களுக்குத்தேவையான உதவிகளைச்செய்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அகதிகளுக்குப் புனர்வாழ்வளிப்பது குறித்தும்சமூக சேவை திணைக்களம் ஆலோசனை நடத்திவருகிறது. (அ)

## நல்லூரான் வெண்பா!

வந்ததுயர் ஓடி மறையும்! வருதுயரும்
கந்தன் கருணைக் கடிவேலால்-வெந்துவிழும்!
சந்ததமும் இன்பம் தழைக்குமே! நல்லூரான்
சுந்தரமே கண்டே தொழு.

—வித்துவான் சி. ஆறுமுகம்